26.09.2025

அ.வ.எண். 92/2017

வா.சா.2 - சரோஜா க/பெ. பழனிச்சாமி

Solemnly affirmed and sworn by Tmt.A.Santhi, Assistant on 26.09.2025 is accordance with the provision of Act X of 3331

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. நான் படிக்கவில்லை. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலம் யார் சொல்லி தயார் செய்யப்பட்டது என்றால் நான் சொல்லி தயார் செய்யப்பட்டது. யார் டைப் செய்தார்கள் என்றால் தட்டச்சு செய்பவர் நான் சொன்னதை டைப் செய்தார். நான் பீளமேட்டில் பிறந்து, வளர்ந்தேன். நான் சொல்லியுள்ள முகவரியில் நான் மட்டும் தான் வசித்து வருகிறேன். வாதி மருதக்குட்டி பிரதிவாதி சின்னக்குட்டி மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார். வாதி மருதக்குட்டிக்கு உடன்பிறந்தவர்கள் இரண்டு பேர் தான். மருதக்குட்டியின் உடன்பிறந்தவர்களின் பெயர் தெரியாது. அவர்கள் எந்த ஊரில் வசித்து வருகிறார்கள் என்றால் பெரியக்கா நீலாம்பூரிலும், சின்னக்கா சரவணம்பட்டியிலும் வசித்து வருகிறார்கள்.

2. வாதி சொத்தை பிரதிவாதி இடையூறு செய்வதாக சொல்லியுள்ள நிலையில் அது சம்மந்தமாக பத்திரத்தை பார்த்துள்ளேனா என்றால் இல்லை. நான் எதன் அடிப்படையில் சொல்கிறேன் என்றால் நான் 45 ஆண்டுகளாக அங்கு இருக்கிறேன், வாதிகள் 45 ஆண்டுகளாக புழங்கி வருகின்றனர். 1 முழம் என்பது எத்தனை அடி இருக்கும் என்றால் தெரியாது. என்னுடைய வீட்டின் புல எண் என்ன என்றால் 1/51 A ஆகும். வாதி என்ன பரிகாரம் கேட்டு இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளனர் என்றால் மருதக்குட்டி இடத்தில் இடத்தகராறுக்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

3. வழக்கு சொத்தை நீதிமன்றம் மூலமாக அளக்க வந்தபோது நான் உடன் இருந்தேனா என்றால் நான் கட்டிட வேலைக்கு சென்றுவிட்டேன். நான் வாதியின் சொத்துக்களை அளந்து தெரிந்து கொள்ளவில்லை என்றால் சரிதான். அதேபோல் பிரமாண வாக்குமூலம் பத்தி 9 ல், “ சந்தின் கிழபுறத்தில் தென்வடலாக மருதக்குட்டி

அவரது சொத்தான மண் சுவரால் கட்டப்பட்ட வீட்டினை அவ்வப்போது சுண்ணாம்பு பூசி பராமரிப்பு செய்து வந்தார் என சொல்லியுள்ளேன் என்றும், அவர் எந்த வருடம் முதல் அவ்வாறு பராமரிப்பு செய்து வருகிறார் என்றால் தெரியாது. வாதி மற்றும் பிரதிவாதி சொத்துக்களின் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்று என்னால் சொல்ல முடியாது. நான் சாட்சியம் அ ளிக்க எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வரவில்லை என்றும், வாதி கேட்டுக்கொண்டதால் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான்.

4. வாதியின் சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் மருதக்குட்டியின் தகப்பனார் அய்யாக்கவுண்டருக்கு பாத்தியப்பட்டது. அய்யாக்கவுண்டரின் மனைவி பெயர் தெரியாது. இருவரும் எந்த வருடம் இறந்தார்கள் என்று குறிப்பிட்டு சொல்ல முடியுமா என்றால் தெரியாது. வாதிகளின் சொத்திற்கு நான்குபுறமும், யார் உள்ளார்கள் என்று சொல்ல முடியும், மேற்கே எனது வீடும், கிழக்கே சின்னக்குட்டியின் வீடும், தெற்கே ராசுக்கண்ணனின் வீடும் உள்ளது. எனது பிரமாண வாக்குமூலம் பத்தி 14 ல் " மருதக்குட்டிக்கு சொந்தமான இடத்தில் சின்னக்குட்டி வகையரா ஆக்கிரமிப்பு செய்து வீடு கட்டியுள்ளார்கள் என சொல்லியுள்ளேன் என்றும், அவர்களின் பத்திரத்தை நான் பார்த்தேனா என்றால் பார்க்கவில்லை, 45 ஆண்டுகளாக மருதக்குட்டி புழங்கி வருகிறார்.

5. மருதக்குட்டி தனக்கு சொந்தமான இடத்தில் வீடு கட்டி ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள் என்று மருதக்குட்டி என்னிடம் சொன்னதின் அடிப்படையில் தான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். வாதிகள் மற்றும் அவரது உறவினர்கள் பிரச்சனைக்குரிய பகுதியில் சுவர் வைத்து விட்டார்கள் என்றால் அன்றைய தினம் நான் இல்லை. தற்போது அந்த சுவர் உள்ளதா என்றால் உள்ளது. வழக்கின் வாதிகளுக்கு ஆவணப்படி சொத்து இல்லாத காரணத்தால் வாதி சாட்சியம் அளிக்க என்னை அழைத்து வந்தார்கள் என்றால் சரியல்ல. மேற்படி சந்தை வாதிகள் ஒருபோதும் அனுபவம் செய்யவில்லை என்றால் சரியல்ல.

6. எனது பிரமாண வாக்குமூல சாட்சியமும், குறுக்கு விசாரணை சாட்சியமும் ஒன்றுக்கொன்று முரண்பட்டுள்ளதால் என்னுடைய சாட்சியம் ஏற்றுகொள்ள முடியாது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

1. 1/51 A என்ன என்றால் எனது வீட்டு நம்பர் ஆகும்.

**மறுகுறுக்குவிசாரணை**

1. எனது வீட்டின் புல எண் தெரியாது.

Taken down by me to open court read over to the witness and acknowledged by him / her to be correct

Sd./M.Santhosham
District Munsif, Sulur